# FORUM OF BSNL UNIONS AND ASSOCIATIONS OF EXECUTIVES AND NON EXECUTIVES

## தமிழ் மாநிலம்

# துணை டவர் நிறுவனம் அமைக்காதே.... 16.09.2015 தர்ணா

**09.09.2015**

அன்பார்ந்த தோழர்களே,

05.08.2015 அன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் BSNLல் இருந்து அதன் டவர்களை தனியாக பிரித்தெடுத்து ஒரு துணை டவர் நிறுவனத்தை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தில் அக்கறையுடன் பணியாற்றும் அனைத்து அதிகாரிகளும், ஊழியர்களும் ஏப்ரல்21,22 ஆகிய தேதிகளில் துணை டவர் நிறுவனம் கூடாது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் தங்களது கோபத்தை முழுமையாக வெளிப்படுத்திய பின்னரும், இந்த அரசாங்கம் இதனை கணக்கில் எடுக்காமல் துணை டவர் நிறுவனம் அமைக்கும் முடிவை எடுத்தது மிகவும் வேதனைக்குரியது. எனவே துணை டவர் நிறுவனம் அமைக்கும் மத்திய அரசின் முடிவை அரசாங்கம் கைவிட வேண்டும்.

BSNLல் உள்ள சுமார் 65,000 டவர்களை அரசாங்கம் தனியாக பிரித்து அதில் உள்ள ஒரு சில அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுடன் புதிய துணை டவர் நிறுவனத்தை அரசாங்கம் உருவாக்கும். புதியதாக உருவாகும் இந்த துணை டவர் நிறுவனம் செழிப்பாக இருக்கக்கூடும். இந்த டவர்கள் மூலம் வரும் மிகப்பெரிய வருவாய் BSNL நிறுவனத்திற்கு வராது. தற்போது BSNL நிறுவனத்தை புத்தாக்கம் செய்வதற்காக நடைபெற்று வரும் கடுமையான முயற்சி பலனளிக்காமல் போய்விடும்.

மத்திய அமைச்சரவை எடுத்த முடிவில், இந்த துணை டவர் நிறுவனத்தின் மிக பெரும்பாலான பங்குகள் BSNL வசமே இருக்கும் என்கின்ற அறிவிப்பு, அந்த நிறுவனத்தில் தனியாரும் பங்கேற்பார்கள் என்பதையே தெளிவாக்குகிறது. பல்வேறு கமிட்டிகள், BSNLன் பங்குகளை விற்பனை செய்ய அறிவுறுத்திய போதும், BSNLல் இருக்கின்ற அதிகாரிகளும், ஊழியர்களும் ஒன்றாக இணைந்து தொடர்ந்து நடத்திய போராட்டங்கள் மூலம் பங்கு விற்பனையை தடுத்து நிறுத்தி உள்ள சூழ்நிலையில், இந்த துணை டவர் நிறுவனத்தில் தனியாருக்கு பங்களிப்பது என்பது கொல்லைப்புற வழியாக BSNLன் பங்கு விற்பனைக்கான ஏற்பாடே ஆகும். இதில் நுழையும் தனியார்கள் VSNL நிறுவனத்தை முழுவதும் விழுங்கிய TATA நிறுவனத்தை போல நமது BSNL நிறுவனத்தையும் விழுங்கி விடும் பேராபத்து உள்ளது.

எனவே அரசாங்கத்தின் இந்த முயற்சி என்பது BSNL நிறுவனத்தை நலிவடையச் செய்து, தனியாருக்கு தாரை வார்க்கும் ஆபத்து உள்ளது. எனவே இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என 12.08.2015 அன்று இந்திய நாட்டில் உள்ள அனைத்து கிளைகளிலும் சக்தியான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆனாலும் இதுவரை அரசாங்கம் தனது முடிவை கைவிடவில்லை என்பதால், 31.08.2015 அன்று நடைபெற்ற FORUM கூட்டத்தில் அரசாங்கத்தின் இந்த முடிவை எதிர்த்து 16.09.2015 அன்று அனைத்து மாவட்ட/ மாநில தலைநகர்களிலும் தர்ணா நடத்துவது என முடிவு செய்துள்ளது. இந்த தர்ணாவை நமது மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் சக்தியாக நடத்த வேண்டும். இதற்காக மாவட்ட FORUMகள் உடனடியாக கூடி இதற்கான தயாரிப்பு பணிகளைத் துவங்க வேண்டும். இந்த தர்ணாவை பெரும்பாலான ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் பங்கேற்புடன் வெற்றிகரமாக நடத்திட வேண்டும் என தமிழ் மாநில FORUM அனைத்து தோழர்களையும் கேட்டுக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,
தோழமையுள்ள,

| | |
|---|---|
| **R.Pattabiraman** | **S.Chellappa** |
| Leader, Forum | Convener, Forum. |

**BSNLEU - NFTE(BSNL) - TEPU - SNEA - AIBSNLEA - AIBSNLOA - SNATTA - TSOA - AIGETOA**